Royal College of Anaesthetists

# மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகள் மற்றும் பக்க விளைவுகள்

# மார்பு தொற்று

## இந்தச் சிற்றேட்டைப் பற்றி

இந்தச் சிற்றேடு ஒரு பொது மயக்க மருந்துக்குப் பிறகு மார்பு நோய்த்தொற்றைப் பெறும் அபாயத்தைப் பற்றியது. இது, நீங்கள் ஒரு பொது மயக்க மருந்து வழங்கலைப் பெற்ற பின்னர் எதிர் கொள்ளக்கூடிய ஒரு பக்க விளைவாகும். இந்தச் சிற்றேடு மார்பு தொற்றுக்கான காரணங்களை விளக்குகிறது, அதைப்பற்றி என்ன செய்யலாம் என்று தெரிவிக்கிறது.

பொது மயக்க மருந்துகள் என்பவை ஆழமான, தூக்கத்தைப் போன்ற நிலையைக் கொடுக்கும் மருந்துகளாகும். சில அறுவைச் சிகிச்சைகள் மற்றும் செயல்முறைகளுக்கு இவை தேவைப்படுகின்றன. உங்களுக்கு ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கப்பட்டால் நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள், எதையும் உணரமாட்டீர்கள்.

வெவ்வேறு வகை பொது மயக்க மருந்துகள் பற்றி நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் படிக்கலாம். இது வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## மார்பு தொற்று என்றால் என்ன? அறுவைச் சிகிச்சைக்குப்பின் அது ஏன் ஏற்படலாம்?


- இருமுவதன் மூலம் உங்கள் நுரையீரல்களிலிருந்து கபம் நீக்கப்படுகிறது. கபம் என்பது, உங்கள் நுரையீரல்கள் மற்றும் நெஞ்சில் உள்ள சளியாகும்.
- கபம் நுரையீரல்களிலிருந்து நகரும் வழியைப் பொது மயக்க மருந்து பாதிக்கலாம்.
- சில அறுவைச் சிகிச்சைகள் இருமுவதை வலி மிகுந்த அல்லது கடினமான செயலாக ஆக்குகின்றன.
- நீங்கள் இருமல் மற்றும் கபத்தை எளிதில் அகற்ற முடியாவிட்டால், அது உங்கள் நுரையீரலில் நோய்த்தொற்றுகள் உருவாகலாம். எடுத்துக்காட்டாக, நிமோனியா (நுரையீரல் அழற்சி) என்பது ஒரு வகை மார்பு தொற்று ஆகும்.

# இது நிகழ எவ்வளவு வாய்ப்புள்ளது?

இந்தச் சூழ்நிலைகளில் உள்ளவர்களுக்கு மார்பு தொற்று வருகிற வாய்ப்பு கூடுதலாகும், இவர்களுக்குக் கூடுதல் அக்கறை தேவைப்படும்:

- உங்களுக்கு நெடுநாட்களாக ஒரு நோய் உள்ளது அல்லது உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக நீங்கள் மோசமான உடல்நிலையில் இருந்தீர்கள்
- அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நன்றாக இருமுவது உங்களுக்குச் சிரமமாக இருக்கும். எடுத்துக்காட்டாக, உங்களுக்கு அடிவயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டால், அல்லது, உங்களால் எளிதில் நடமாடமுடியாத சூழ்நிலை இருந்தால் இவ்வாறு ஆகலாம்
- நீங்கள் புகை பிடிப்பவர்.

இந்த ஆபத்துக் காரணிகளைக் கொண்ட **ஒவ்வொரு 100 பேரில்**



2-20 மார்பு தொற்றுநோயை உருவாக்கியது

**80 முதல் 98 நபர்களுக்கு ஏற்படவில்லை**

இந்த எண்கள் ஆராய்ச்சி ஆய்வுகளிலிருந்து வருகின்றன. நாங்கள் இந்த எண்களை எங்கிருந்து பெற்றோம் என்பதை எங்கள் இணையத் தளத்தில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

# ஒருவேளை எனக்கு மார்பு தொற்று வந்தால் என்ன ஆகும்?

உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழு உங்களுக்கு மார்பு தொற்று உள்ளதா என்றும், அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க சில சோதனைகள் செய்வார்கள்.

- மார்பு தொற்று உள்ள போது உங்களுக்கு மூச்சுவிடுவது கடினமாக இருக்கலாம். அப்படி இருந்தால், உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவினர் உங்களுக்கு உதவுவார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் உங்களுக்கு ஒரு முகமூடியின் வழியாக பிராணவாயுவை வழங்கலாம்.
- உங்களுக்கு மார்பு அல்லது முதுகுவலி இருக்கலாம் . நீங்கள் மிகவும் களைப்பாக உணரலாம்.
- சில நேரங்களில், உங்கள் இரத்த அழுத்தம் குறையலாம், உங்கள் இதயம் இன்னும் விரைவாகத் துடிக்கலாம். உங்கள் குழு உங்கள் இரத்த அழுத்தம், இதயத் துடிப்பைக் கண்காணிப்பார்கள்.

## மார்பு தொற்று எப்படிச் சிகிச்சை அளிக்கப்படுகிறது?

உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவினர் மார்பு தொற்று குணப்படுத்துவதற்குப் பல விஷயங்களைச் செய்யலாம்.

### நுண்ணுயிர் எதிர்ப்பிகள்

மார்பு தொற்றுகள் பாக்டீரியா அல்லது வைரஸால் உண்டாகலாம். உங்கள் மார்பு தொற்று பாக்டீரியாவால் உண்டாகியிருந்தால், உங்கள் மருத்துவர்கள் உங்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் வழங்கலாம். நுண்ணுயிர் எதிர்ப்பிகள் இந்த வழிகளில் வழங்கலாம்:

- ஒரு கானுலா ('சொட்டு'), உங்கள் நரம்புக்குள் செல்கிற ஒரு மிக மெல்லிய பிளாஸ்டிக் குழாய்
- நீங்கள் விழுங்கக்கூடிய மாத்திரைகள்.

### நரம்பு வழியாக வழங்கப்படும் திரவங்கள்

உங்கள் குழுவினர் ஒரு கானுலா வழியாக நேரடியாக உங்கள் நரம்பில் திரவங்களை வழங்கலாம். இவை உங்கள் நுரையீரல்களில் உள்ள கபத்தை இளக்க உதவுகின்றன. இதன்மூலம் இருமுவது எளிதாகும். இது தொற்றுநோயை எதிர்த்துப் போராடவும் உதவும்.

### பிராணவாயு

சில நேரங்களில், ஒரு முகமூடி அல்லது உங்கள் மூக்குத் துளைகளில் சிறிய பிளாஸ்டிக் குழாய்களின் வழியாக உங்களுக்கு பிராணவாயு வழங்கப்படலாம். பிராணவாயு
வழங்கல் மிகவும் ஒலியை உண்டாக்கலாம், உங்கள் வாய் மற்றும் மூக்கை உலரச்செய்யலாம்.

உங்கள் நோய்த் தொற்று மிகவும் தீவிரமாக இருந்தால், நீங்கள் ஒரு தீவிரச் சிகிச்சைப் பிரிவு அல்லது ஓர் உயர் சார்பு பிரிவில் கவனிக்கப்பட வேண்டியிருக்கலாம். ஒரு இயந்திரம் (ஒரு வென்டிலேட்டர்) தேவைப்பட்டால் சுவாசிக்க உதவும். உங்களுக்கு இந்த இயந்திரம் தேவைப்பட்டால், உங்களுக்கு உணர்வு நீக்கல் வழங்கப்படும்.

### ஃபிசியோதெரபி

இந்தக் குழு உங்களை ஒரு ஃபிசியோதெரபிஸ்ட்டிடம் அனுப்பலாம். கபத்தை நீக்குவதற்கு இன்னும் செயல்திறனுடன் மூச்சுவிடுவதும் இருமுவதும் எப்படி என்று அவர் உங்களுக்குக் காண்பிப்பார்.

## இதை எப்படித் தடுக்கலாம்?

உங்களுக்கு ஒரு மார்பு தொற்று வருகிற ஆபத்து இருக்கலாம் என்று உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனர் நினைத்தால், அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக அவர் உங்களிடம் பேசுவார். அவர் பின்வருவனவற்றை உங்களிடம் விவாதிப்பார்:

- அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உங்களுக்கு மார்பு தொற்று வருகிற வாய்ப்பு எவ்வளவு

- இன்னொரு வகை உணர்ச்சி நீக்கி வழங்கல் (எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் பாதிக்கும் உணர்ச்சி நீக்கி வழங்கல்) உங்களுக்குப் பொருத்தமாக இருக்குமா
- அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மார்பு தொற்று உண்டாகிற வாய்ப்பைக் குறைப்பதற்காக உங்களுக்குக் கூடுதல் பராமரிப்பு தேவைப்படுமா. எடுத்துக்காட்டாக, உங்கள் சுவாசத்திற்கு உதவ கூடுதல் வலி நிவாரணம் அல்லது பிசியோதெரபி தேவைப்படலாம்.

## நானாகவே என்ன செய்யலாம்?

### அறுவை சிகிச்சைக்கு முன்பு

- உங்களுக்கு காய்ச்சல் தடுப்பூசி வழங்கப்பட்டால், அதை எடுத்துக் கொள்வதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும், ஏனெனில் இது மார்பு நோய்த்தொற்றின் அபாயத்தைக் குறைக்கும்.
- நீங்கள் புகை பிடிப்பவர் என்றால், மருத்துவமனைக்குச் செல்வதற்கு ஆறு வாரங்கள் முன்பாக அதை விட்டுவிட முயலுங்கள். உங்களால் அதை விட இயலாது என்றால், உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய நாட்களில் நீங்கள் அதை நிறுத்த முயல்வது முக்கியமாகும். இது உங்கள் நுரையீரலின் புகை சேதத்திலிருந்து மீளவும், நோய்த்தொற்றுக்கு அதிக எதிர்ப்பை ஏற்படுத்தவும் நேரம் தருகிறது.
- இதற்கான உதவி இங்கு கிடைக்கிறதுwww.nhs.uk/smokefree மற்றும் www.cpoc.org.uk/stopping-smoking.

### அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு

- அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உங்களுக்கு வலி ஏற்பட்டால், அதை உடனடியாக உங்கள் குழுவினருக்குத் தெரிவியுங்கள். நீங்கள் ஆழமாக மூச்சு விடவும், இன்னும் எளிதாக இருமவும் உதவுகின்ற வலி நிவாரணம்  அவர்கள் போதுமான அளவு வழங்குவார்கள்.
- திரவங்களை குடிக்க நீங்கள் ஊக்குவிக்கப்படுவீர்கள். உங்கள் நுரையீரலில் உள்ள கபம் இளகவும், இருமுவது எளிதாகவும் இது உதவலாம்.
- அறுவைச் சிகிச்சைக்குப் பின் நன்றாக மூச்சு விடவும் இருமவும் உங்கள் குழுவினர் ஏதாவது பயிற்சிகளைச் சொல்லிக் கொடுத்திருந்தால், அவற்றைச் செய்யுங்கள்.

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின் மூலம் உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழுப் பொறுப்பு துறப்புக்கு, தயவுசெய்து பார்க்கவும்: (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders மொழிபெயர்ப்பாளர் சமூகத்தால் வழங்கப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்புகளின் தரம், மொழிபெயர்ப்புகளை முடிந்தவரை துல்லியமாக மாற்றுவதற்காக சரிபார்க்கப்படுகிறது, ஆனால் தவறான மற்றும் சில தகவல்களை தவறாகப் புரிந்துகொள்வதற்கான ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் இல்லம், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG

## www.rcoa.ac.uk

## ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.